**<u>25.08.2021</u>**

பொருள் எண்.1

திருச்செங்கோடு நகராட்சியில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவின்படி கடந்த 30.07.2021 அன்று 164 தூய்மை பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்தபுள்ளி கோரி பணிமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 29.07.2021–ம் தேதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அலைபேசி செய்தியில் ஒப்பந்தம் சம்மந்தமாக புதிதாக வழிகாட்டுதல் நெறிமுறைகள் வந்தவுடன் அதனை பின்பற்றி புதிதாக ஒப்பந்த புள்ளி கோருமாறும் அதுவரை ஒப்பந்தபுள்ளி பெறுவதை நிறுத்தி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 30.07.2021 அன்று நடைபெறவிருந்த ஒப்பந்தபுள்ளி பெறுவது ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் கடந்த 31.07.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை. அவர்களால் நடத்தப்பெற்ற காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் புதிதாக வழிகாட்டுதல் நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்ட பிறகே புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இன்று வரை வழிகாட்டு நெறிமுறைகள் வரப்பெறாததாலும் தற்சமயம் இப்பணி செய்துவரும் ஒப்பந்தபுள்ளி காலம் வருகிற 31.08.2021 அன்று முடிவடைய விருப்பதாலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மறு உத்தரவு வரும் வரை ஏற்கனவே இப்பணி செய்து வரும் K.KUMAR CONTRACTOR என்ற ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே உள்ள பணி உத்தரவில் உள்ள நிபந்தனைகளின்படியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதத்தின்படியும் பணிநீடிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மறு உத்தரவு வரும் வரை பணிநீடிப்பு வழங்கலாம்.

<u>(கோப்பு எண்.2576/2020/எச்1)</u>

பொருள் எண்.2

திருச்செங்கோடு நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கார் வாகனம் எண் TN 34 T 999-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பொருட்டு உத்தேச மதிப்பீடு கோரப்பட்டதில் ரூ.25,000/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வரப்பெற்ற உத்தேச மதிப்பீட்டு தொகையான ரூ.25,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண்.5093/2021/எச்2)